பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

இரசாயனவியல்
திரு. சண்முகசுந்தரம்
A/L 90
Mon, Thu.
3-00 — 4-00 p. m.
A/L 89
Mon, Thu.
4-30 — 6-00 p.m.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலே.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

பௌதிகவியல்
திரு. சோதிலிங்கம்
A/L 90
Wed, Fri 3-00 — p.m.
A/L 89
Wed, Fri.
4-00 — 6-00 p.m.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலே,

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஹூ ஆடி மீ 27 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 27 ( 11 08 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 154

## பூஸா கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு

கொழும்பு, ஆக. 11

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளுக்கு சுகாதாரத்துக்கு ஒவ்வாத முறையில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளே வழங்கப்படுகின்றன.

இவ்வாறு அங்குள்ள கைதிஒருவர் குறைப்பட்டார்.

இங்கு வழங்கப்படும் உணவு மிகவும் கீழ்த்தரமானது; சோற்றில் கல்; மீன், இறைச்சி போன்றவை பதம்கெட்டவை; மிருகங்கள்கூட விரும்பி உண்ணுமோ என்ற அளவிற்கு மலிவான மரக்கறி வகைகள்; முற்றிய வெண்டி, அழுகிய பூசணி, வாடி வதங்கிய கீரை என மரக்கறிகள் வழங்கப்படும் தெளிரில் சக்ரின் கலக்கப்படுகிறது.

இந்த உணவு வகைகளினால் கைதிகள் நோய்களுக்கு ஆளாகின்றனர்.

சாப்பாடு கொண்டு வரும் பாத்திரங்கள் நிறமாய்ப் பார்ப்பதற்கே அலங்கோலமாய் இருக்கின்றன.

இந்த நிலையை நாம் நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தியும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

எமது முகாமுக்குப் பொறுப்பதிகாரியான கேர்ணல் பக்ஷ வீரா தை திசளாகிய எங்கள் விடயத்தில் சில சுதந்திரங்களை வழங்கியுள் (6ஆம் பக்கம் பார்க்க)

கூட்டணிப் பிரமுகர் வீட்டிற்கு குண்டுவீச்சு

## 3 போராளிகள் திருமலையில் கைது!

திருகோணமலை, ஆக 11

திருகோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் கூடியிருந்த வீட்டிற்கு கிரனேட் வீசிய சம்பவம் தொடர்பாக போராளி இயக்கம் ஒன்றின் அலுவலகத்தில் இருந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் திருமலை தபால் நிலைய வீதியிலுள்ள முன்னாள் திருமலை எம். பி. திரு. இரா. சம்பந்தனின் மைத்துனரான திரு. தியாகலிங்கத்தின் வீட்டில் கிரனேட் ஒன்றுவீசப்பட்டது.

திரு. சம்பந்தனின் வீட்டிற்கு முன்னால் பாதை அருகிலுள்ள திரு தியாகலிங்கத்தின் வீட்டு வேலஹேறையில் இருந்து சிலர் கதைத்துக் கொண்டிருந்தபோது இந்த கிரனேட் விசப்பட்டது.

பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

அங்கு திரு. தியாகலிங்கம், திரு பத்மநாதன் (ஈழத்துநாதன்), திரு. காளிக்குட்டி, திரு. நடனகிராமணி, திரு சத்திய சீலராசா ஆகியோர் அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தனர்.

வெளியே மரநிழலில் வேறு சிலர்நின்று கதைத் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர் நேற்றும் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றும் மூன்றாவது நாளாக விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

அமைதிப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் உயிரியல் விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் வருட மாணவன் தவராசாவை விடுதலை செய்யக் கோரியேஇப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மாணவர்களின் பகிஷ்கரிப்பு காரணமாக யாழ் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன. (உ-5)

## எரிபொருள் விநியோகம் வவுனியாவில் கட்டுப்பாடு

வவுனியா, ஆக 11

இந்திய அமைதிப் படையினர், வவுனியாவில் எரிபொருள் விநியோகத்தில் சில கட்டுப்பாடுகள் விதித்துள்ளார்கள்.

வவுனியா எரிபொருள் விற்பனை நிலையங்களில், கொள்கலன்களில் எரிபொருளைக் கொண்டு செல்வோருக்கு விற்பனை செய்யக் கூடாதென்று உத்தரவிடப்பட்டுள்ளது. என்னும் குறைந்த அளவிலான மண்ணெண்ணெய் கொண்டு செல்லவும், அனுமதிப்பத்திரத்துடன் வருபவர்கள் ''கான்'' களுடன் வந்தால் அவர்களுக்கும்விற்பனை செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

டீசல், பெற்றோல் என்பவற்றை வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள தாங்கிகள் தவிர வேறு எதிலும் கொண்டு செல்லக் கூடாதென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்புதிய நடவடிக்கைகளினால் தூரஇடங்களில் உள்ள விவசாயிகள்வாகனச் சொந்தக்காரர்கள் தமக்குத் தேவையான எரிபொருளை ஒரேமுறையில் வந்து வாங்கிச் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது. (அ-164)

ஈழத்தமிழர் பிரச்சினை தீர

# இந்தியத் தரப்பினில் புதியமுயற்சிதேவை

## திருச்சியில் அமைச்சர் தொண்டமான்

திருச்சி, ஆக. 11

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அமைதியை ஏற்படுத்தவும் இந்தியா புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

அமைச்சர் எஸ். தொண்டமான் நேற்று திருச்சியில் வைத்து இப்படி கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் முழு அமைதி நிலைநாட்டப்படும் வரை வடக்கு. கிழக்கில் இந்திய அமைதிப்படை தொடர்ந்து நிலை கொண்டிருக்க வேண்டும் என்பதே இலங்கை அரசின் விருப்பம் என்றும் அவர் சொன்னார்.

திருச்சியில் வைத்துச் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அவர் நேற்றுகொழும்பில் இருந்து திருச்சி சென்றார். அங்கு அவர் மேலும் சொன்னதாவது:-

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதிப்படைதான் நிலை கொண்டு உள்ளது.

ஆகவே இந்திய அரசுதான் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணுவதற்கான புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் முழு அமைதி ஏற்பட்ட பின்னரே மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும். முழு அமைதி ஏற்படும் வரை இந்திய அமைதிப் படை வடக்கு, கிழக்குப் பகுதிளில் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதே இலங்கை அரசின் விருப்பம் - என்றார் அவர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி நிறைவேற்றப்பட வேண்டிய தனது கடப்பாடுகளை இலங்கை அரசு பூர்த்தி செய்து விட்டது என்றும் அவர் சொன்னார் (உ-எ)

### முச்சந்தி முரளி



தொலைபேசிப் பிரச்சினை பெரிய தொல்லையாய் போச்சுது பாத்தியளோ...! எண்டாலும் ஹெக்டே கனவான் தனமாய் ராஜினாமாச் செய்து விட்டார்! எங்கடை நாட்டிலை எண்டால்...?!

## மாவையில் இன்று தேர்த் திருவிழா

காங்கேசன்துறை, ஆக 11

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மாவை கந்தசுவாமி ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

விநாயகர், சிவன், சுப்பிரமணியர், ஆறுமுக சுவாமி, சண்டேசுவரர் ஆகிய ஐந்து மூர்த்திகளும் பஞ்சரதங்களில் ஆரோகணித்து வீதியுலா வரும் கண்கொள்ளாக் (6 ஆம் பக்கம் பார்க்க)

தேர்த் திருவிழா
சிறப்பிதழ்
3ஆம் பக்கத்தில்

கர்நாடக முதலமைச்சர்

## ஹெக்டே நேற்று திடீர் ராஜினாமா!

பெங்களூர், ஆக 11

கர்நாடக முதலமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

புதிய முதலமைச்சரைத் தெரிவு செய்வதற்காக கர்நாடக ஜனதா எம். எல். ஏக்களின் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்தரப்பு எம். எல். ஏக்களின் டெலிபோன் உரையாடல்களை ஒட்டுக்கேட்டதுதொடர்பாகவே முதலமைச்சர் பதவியைத் தான் இராஜினமாச் செய்துவிட்டதாக திரு. இராமகிருஷ்ண ஹெக்டே புதுடில்லியில் செய்தியாளர் (6 ஆம் பக்கம் பார்க்க)



யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் திங்கட்கிழமை நடத்திய பேரணியின்போது எடுக்கப்பட்ட படம். (படம்: அகிராஜ்)

## நான்கு அம்ச நிபந்தனைகளை முன்வைத்து சர்வசன வாக்கெடுப்பு நடத்த இந்தியா தயாரா?

### விடுதலைப் புலிகள் கேட்கிறார்கள்

யாழ்ப்பாணம் ஆக. 11

நான்கு அம்ச நிபந்தனைகளை முன்வைத்து சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதற்குத் தயாரா என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அரசிடம் கேட்டிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இது தொடர்பாக விடுத்த அறிக்கை வருமாறு:

ஜே. ஆர்.-ராஜீவ் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த ஒப்பந்தத்தைஏற்று ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும். இதுதான் இந்தியாவின் நிலைப்பாடு.

இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டபோது தமிழ் மக்களின் அபிலாஷைகள் | என்ன என்பதைக் கருத்தில்எடுத்துக்கொள்ளப்படவில்லை.

ஒப்பந்தம் செய்யப்பட்டபின் அமைதிப் படை என்னும் பெயரில் இன ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழீழத்தில் காலடிஎடுத்துவைத்தது.

தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டதா? இல்லை. முன்னெப்போதும் இல்லாத வகையில் தமிழர் பிரச்சினை கூர்மை அடைந்தது.

தமிழீழத்தில் சிங்களக் குடியேற்றங்கள்தொடர்ந்து நடைபெற்றன. விடுதலைப் புலிகளைத் திட்டமிட்டு அழிக்க மற்றைய குழுக்களுக்கு ஆயுதமும் பயிற்சியும் வழங்கப்பட்டு அக்குழுக்கள் தமிழீழத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

எமதுதலைவர்களை இலங்கை அரசு கைதுசெய்து விசாரணைக்காகக் கொழும்பு கொண்டு செல்ல முயன்றபோது, இந்திய அரசு மௌனம் சாதித்தது.

தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்க வந்ததாகக் கூறும் இந்திய அமைதிப்படை தமிழர் (6 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா-ஹொரவப்பொத்தானை வீதியில்

## கடத்தப்பட்ட பஸ்ஸில் உடைமைகள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஆக. 11

வவுனியா-ஹொரவப்பொத்தானை வீதியில் ஆறும் கட்டையில் கடந்த திங்கட்கிழமை கடத்தப்பட்ட பஸ்ஸில் 43 பயணிகள் இருந்தனர்.

சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான அவர்களின் உடைமைகள் காட்டுப் பகுதியில் வைத்துக் கொள்ளையிடப்பட்டன.

ஆயுதங்கள் வைத்திருந்த ஏழுபேர் கொண்ட கோஷ்டியினராலேயே இப்பஸ் கடத்தப்பட்டது என்ற தகவலும் கிடைத்துள்ளது

பயணிகளிடமிருந்து உடைமைகளை கொள்ளையடித்த பின்னர் பஸ்ஸையும் பயணிகளையும் அந்தக் கோஷ்டி விடுவித்தது.

கொள்ளை போன பொருள்களின் பெறுமதி சுமார் 2 லட்சம் ரூபா வரையில் இருக்கும் என்று கூறப்படுகிறது. (உ-எ)

### சுபநேரம்

11 – 08 – 88
ஆடி — 27
வியாழக்கிழமை

சுபநேரம்:
07 34முதல் 09.04வரை
ராகுகாலம்:
01.34முதல் 03.04வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

மாவிட்டபுரம் கந்தசுவாமி தேர்

## பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் - அம்பாறையில்

கொழும்பு ஆக 11

கடந்த செவ்வாய்க்கிழமைஇரவு அம்பாறை மாவட்டத்தில் சென்ரல் காம்ப் பொலீஸ் நிலையம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

ரோந்து சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்றின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## பிரயாணிகள் படகு நடுக்கடலில் சோதனை

நெடுந்தீவு, ஆக 11

நெடுந்தீவில் இருந்து நேற்றுக்காலை குறிகட்டுவானை நோக்கி சென்று கொண்டிருந்த பிரயாணிகளின் படகு நடுக்கடலில் வைத்து இந்திய அமைதிப்படையினரால் சோதனையிடப்பட்டது.

ரி- 79 இலக்கமிடப்பட்ட இந்திய ரோந்துப் படகில் வந்தவர்களே சோதனையில் ஈடுபட்டனர்.

பிரயாணிகளின் படகை நோக்கி இந்திய அமைதிப்படையினரின் படகு வந்தபோது அதிலிருந்து மேல் நோக்கி துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

படகை நெருங்கிய படையினர் அதில் செல்லும் பயணிகள் குறித்து விசாரணை நடத்தினர். படகின் அனுமதிப்பத்திரங்களையும் படையினர் பார்வையிட்டனர்.

இதற்கிடையே குறிகாட்டுவான் துறைமுகத்தில் சுமார் 300க்கும் அதிகமான அமைதிப் படையினர் குவிக்குத்து (6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் செற்ற (B 380 Bab - Cock) சேவல் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், புறொய்லர் குஞ்சுகள் 12/8; 19/8 லும். கோல்டன் கொமட் பிறவுன் சேவல் பேட்டுக்குஞ்சுகள் 17/8; 19/8; 23/8; 27/8ம் திகதியிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும். 1. R. S. K. Farm, முருசபதி உடுவில்; 2. குபேரன் ஸ்ரோர்ஸ் கொக்குவில் சந்தி, கொக்குவில். (5668)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

எம்மிடம் 95 விகிதம் முட்டையிடும் நல்லினப் பேட்டுக்குஞ்சுகள் (ஒரு நாட்குஞ்சுகள்) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திருமகள் ஸ்ரோர்ஸ், 705 கே. கே. எஸ். ரோட், சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (5714)

### Dolly Tea டொலி தேயிலை

அதிக சுவை, கூடிய சாயம்; நறுமணம்: இலவச ஸ்ரிக்கர்; இத்தனைக்கும் உடனே நாடுங்கள்: டொலி தேயிலை. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:-டொலி, கல்வயல் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (5660)

தேவை

### Spinner - தேவை

அலுமினியம் தொழிற்சாலைக்கு ஸ்பின்னர் (Spinner) தேவை. தகுதிப் பத்திரங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். விலாசம்:- நியூ லங்கா அலுமினியம் தொழிற்சாலை, 20, அரால் வீதி, ஓட்டுமடம் யாழ்ப்பாணம். (5672)

### மரத்தொழிலகம் தேவை

வீடும், சக்கரவாள், வாட்டுவாள், அமைந்த தொழிலகமும் மாநகர சபை எல்லைக்குள் வாடகைக்கு — அல்லது கொமிஷன் அடிப்படையில் தேவை. தொடர்பு: 319, C/o உதயன், யாழ்ப்பாணம். (5662)

### மணமகன் தேவை

யாழ் / விஸ்வகுலத்தைச் சேர்ந்த உதயத்தில் செவ்வாய் உள்ள 31 வயதுநிரம்பிய தனியார் துறை ஸ்தாபனத்தில் லிகிதராக வேலைசெய்யும் மகளுக்கு மணமகன் தேடுகிறார்கள். அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை உத்தியோகத்தர்கள் விரும்பத் தக்கது. வரனுக்கு ஏற்ற சீதனம் வழங்கப்படும். 316 C/o உதயன், யாழ்ப்பாணம். (5656)

### காணி தேவை

யாழ் மாநகர சபை எல்லைக்குள் பிரதான வீதிகளில், வர்த்தகம் செய்வதற்கு வீட்டுடன் சேர்ந்தோ அல்லாமலோ 1½ — 2 பரப்புக் காணி உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்: 320, C/o உதயன், யாழ்ப்பாணம். (5664)

### வகுப்புகள்

சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆங்கிலம், கணக்கியல், அலுவலக நடைமுறைகள்; STCA — அரசினாலும், யாழ். மாநகர சபையாலும் பதிவு செய்யப்பட்டது திட்ட அமுலாக்கல். இளைஞர் விவகார வேலை வாய்ப்பு அமைச்சினாலும், லண்டன் பிற்மன் நிறுவனத்தாலும் அங்கீகரிக்கப்பட்டது. 149, (37) சிவன் பண்ணைவீதி, (ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தின் பின் வீதி) யாழ்ப்பாணம். வடக்கில் வேறு நிறுவனம் எமக்கு இல்லை. (5670)

### A/L 89; 90 வகுப்புக்கள்

A/L 89; 90 வகுப்புக்கள் வழமையான எமது ஆசிரியர் குழுவினால் நடத்தப்படுகின்றன. புதிதாக A/L 90 Pure / App Maths ஆசிரியர்: திரு. வேலாயுதம் அவர்களால் 13 - 8 - 88 சனி மாலை 4-30மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. Nagalingam Institute, Thirunelvely. (5669)

### ஓர் அரிய சந்தர்ப்பம்

சி. வி. இராஜேந்திரம் அவர்களால் ஆங்கிலம் கற்பிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு விசேஷ பயிற்சி அளிக்கப்படும். விபரங்களுக்கு:- ஏ. கே. சிவஞானம், 171 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (5710)

### பயிற்சிகள்

Radio - T. V, Air-Condition - Refrigeration, வயறிங், வெல்டிங் வைண்டிங், மோட்டார் மெக்கானிசம், பிளம்பிங், Typing, Spoken English மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. அனுபவமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, Aid Ha'l, 328. நாவலர் ரோட், (ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமை) Jaffna. (5496)

### பாடல் பதிவு செய்தல்

நீங்கள் விரும்பும் மதுரகான பாடல்களை நவீன எலக்ரோனிக் ஈக்குவலைசர் மூலம் ஸ்ரீறியோ முறையில் பதிவு செய்து கொள்ளவும் நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மிகப் பழைய, புதிய பாடல்களைத் தெரிவு செய்து கொள்ளவும், நாடுங்கள்: விக்டர் அன் சன்ஸ் 100. ஸ்ரான்லி வீதி, விக்ரேஸ் மியூசிக் சென்ரர் 887, ஆஸ்பத்திரி விதி, சுண்டுக்குளி. விக்டர் அன் சன்ஸ் 81, ஸ்ரேசன் விதி, சுன்னாகம். (C 6053)

### பாடசாலை நிறுவ முயற்சி

கரவெட்டி, ஆக. 11

கரவெட்டி மத்தி கவுந்தில் பகுதியில் உள்ள மாணவர்களின் நலன் கருதி பாடசாலை ஒன்றை அமைப்பதற்கும் கரவெட்டி கிழக்கு உபதபால் கந்தோர் வீதியைச் செப்பனிடுவதற்கும் கரவெட்டி மத்தி கவுந்தில் சன சமூக நிலையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (இ- 70)

# புற - அகத் தோற்றங்களில் எளிமையும் இனிமையும் நிரம்பியவர்

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 11

"அமரர் திரு த. தருமலிங்கம் அதிபர் இலகுவாக விளங்கியவர். நடை உடை பாவனை போன்ற புறத்தோற்றங்களிலும் ஆளுமை நிறைந்த அகத்தோற்றத்திலும் எழிலும் வனப்பும் எளிமையும் இனிமையும் செழுமையும் நிரம்பப் பெற்று ஏனையோருக்கும் எடுத்துக் காட்டாக வாழ்ந்து காட்டிய பெருமகனார்.

கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாலயத்தில் நடைபெற்ற முன்னாள் அதிபர் அமரர் த. தருமலிங்கம் அவர்களது நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசிய யாழ்- பிரதம கல்வி அதிகாரி திரு கு சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் கா. கணேசதாசன் தமது தலைமையுரையில் "அமரர் தருமலிங்கம் கடந்த பதினேழு வருடங்களாக ஞானபண்டித வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்ததோடு சமூகத்துடனும் நல்லுறவை ஏற்படுத்தி தனக்கென ஓர் உரிய இடத்தைப் பெற்றிருந்தார்" என்றார்.

நல்லூர்கல்வி அதிகாரி சு. சிவநாயகமூர்த்தி கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு அ. பஞ்சலிங்கம், தொழில் அதிபர் க. கனகராஜா, ஓய்வு பெற்ற அதிபர் திருமதி க. தருமலிங்கம், கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள், யாழ்- தொழிற் கல்வி அதிகாரி திரு எஸ். சுப்பிரமணியம் ஆசிரியை திருமதி பி பத்மநாதன் ஆகியோரும் அஞ்சலியுரை ஆற்றினர்.

வித்தியாலயப் பெற்றோர் நலன விரும்பிகள் பலரது அன்பளிப்பு உபகரணங்களைக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட புதிய மனையியல் ஆய்வு கூட அறையை பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் அமரர் தர்மலிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாகத் திறந்து வைத்தார்.

இறுதியில் ஞானபண்டித வைரவ ஆலயத்தில் விசேட பூசையும் வழிபாடும் நடைபெற்றன.

ஆசிரியர் கு. மகாலிங்கம் நன்றியுரை கூறினார். (இ)

# 'ஷப்ரு' வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஆக 11

'ஷப்ரு' கிண்ணத்துக்காக யாழ் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டியின் மூன்றும் நாள் ஆட்டங்களில் யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகஅணியும், 'ஷப்ரு' கிரிக்கெட் அணியும் வெற்றிபெற்றன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இப்போட்டிகள் இரண்டும் நடைபெற்றன.

**சென்றலைட்ஸ் வெற்றி**

வட்டுக் கோட்டை 'ஓல்ட் கோல்ட்ஸ்' அணிக்கெதிரான போட்டியில் சென்றலைட்ஸ் அணி வெற்றியீட்டியது.

ஸ்கோர்:-

சென்றலைட்ஸ் அணி 30 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்கள்.

கே. கலாவண்ணன் 100, கே. ராஜீவன் 25, சிவச்சந்திரன் 24, டி. புரட்சிதாஸன் 23 ஓட்டங்கள், திலகன் 3 விக்கெட்டுக்கள்

ஓல்ட் கோல்ட்ஸ்அணி 30 ஓவர்களில் 192 ஓட்டங்கள்.

அன்ரன் 72, விஜேதன் 32, என். நித்தியரஞ்சன் 38 ஓட்டங்கள்.

விஜயானந்தன் 3, முகுந்தன் 2, சாந்திகரன் 2 விக்கெட்டுக்கள்.

**ஷப்ரு வெற்றி**

யாழ் பல்கலைக் கழக அணிக்கெதிரான போட்டியில் ஷப்ரு அணி வெற்றிபெற்றது.

ஸ்கோர்:

ஷப்ரு அணி 27.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்கள்.

அன்ரூ கிறேசியன் 39 ஓட்டங்கள்.

அகிலன் 3, ஆர் மகிந்தா 3 முரளி 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பல்கலைக்கழக அணி 29 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்கள்.

பாலகுமார் 23

ஆர்மகிந்தா21. விக்னபாலன் 21 ஓட்டங்கள்.

வை. ஜெயந்தன் 4, பி. முருகவேள் 2 எஸ். பி. எஸ். இளங்கோ 2, விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டிகளுக்கு திரு. செல்வரெட்ணம், திரு. டி எம் வேதாபரணம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (இ-க)

### இன்னிசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், ஆக 11

செல்வராஜா குழுவினர் வழங்கும் இன்னிசைக் கச்சேரி நிகழ்ச்சி ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்

யாழ். பெருமாள் கோவிலடியில் உள்ள ரசிகரஞ்சனசபா மண்டபத்திலேயே இந்த இசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்த இசை நிகழ்ச்சியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைக்கலைஞர் சங்கீத வித்துவான் எஸ். வேலாயுதம் அவர்களின் பாட்டு இடம் பெறும். (இ-9)

### இதுவரை திருத்த வேலை இல்லை

ஒட்டுசுட்டான், ஆக.11

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினரால் கடந்த ஐந்து வருட காலங்களாக உடைக்கப்பட்டுச் சேதப்படுத்தப்பட்ட அரசாங்க கட்டடங்களும், கூட்டுத்தாபனக் கட்டடங்களும் இதுவரை திருத்த வேலைகள் செய்யப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-113)

### பிரதேச சபை தலைமை அலுவலகம்

மானிப்பாய் ஆக 11

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைகளின் தலைமை அலுவலகமாக மானிப்பாய் நகர மண்டபம் விளங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ- 90)

### ப. நோ. கூ. ச. ஊழியருக்கு போனஸ்

தாளையடி, ஆக. 11

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும சகல ஊழியர்களுக்கும் 'போனஸ்' வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கத்திற்கு கிடைத்த இலாபத்திருந்தே இந்த போனஸை கூட்டுறவு நிர்வாகம் வழங்கியுள்ளது. (இ- 144)

### பணிப்பாளர் மீது சூடு!

#### பெண் ஒருவர் பலி

கொழும்பு, ஆக 11

காலி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு எச். ஏ. ரூபசிங்க இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் போது காயங்களுடன் உயிர் தப்பினார் என்று அறிவிக்கப்படுகிறது.

சூட்டுச் சம்பவத்தின் போது பணிப்பாளரின் நண்பரின் மனைவி சூடுபட்டு உயிரிழந்தார். (ஒ - எ)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Application will be received by me from suitable candidates for the following posts up to 31st August 1988.

**Temporary Assistant Lecturer in Botany / Zoology / Physics Chemistry / Mathematics & Statistits.**

**Temporary Demonstrator in Botany / Physics / Zoology / Chemistry**

**Temporary Instructor in Mathematics & Statistics.**

Application forms and particulars for the above post should be obtained from this office.

Request for application forms for the above post should be accompanied by a self-addressed stamped envelope of 23x10 c.m. in size.

**N. B.** Application from those awaiting results may also be considered.

— REGISTRAR

University of Jaffna, Sri Lanka.
Thirunelvely,
Jaffna.
6th August 1988.

(C 6141)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. மு. ஐயாத்துரை**
(ஓய்வுபெற்ற கூட்டுறவு பரிசோதகர்)

**தோற்றம்:** 6—11—1921 **மறைவு:** 24—07—1987

**எமது அன்புத்தெய்வமே!**

எம்மையெல்லாம் ஆறுதுயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி எய்திய உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

கொண்டமறை. (5758)

### சாம் அரியரத்தினம் ஓய்வுபெற்றார்

யாழ்ப்பாணம், ஆக 11

இலங்கை வங்கியின் யாழ்மாவட்ட முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. சாம் அரியரத்தினம் தமது கடமையிலிருந்து ஓய்வு பெற்றார்.

தற்பொழுது இவரது இடத்துக்கு திரு. க. கணேசமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

## மின்தறி நெசவாளர் தேவை

பிரபல மின்தறி ஸ்தாபனத்திற்கு பெண் நெசவாளர் தேவை. குறைந்தது 2 வருட அனுபவம் வேண்டும். சம்பளம் தகுதி அடிப்படையில. தங்கும் வசதி உண்டு.

விலாசம்:
விளம்பரதாரர்,
இல: 177 C/o உதயன்.
யாழ்ப்பாணம்.
[5711]

## விநாயகா ரூர்ஸ்

**116 ஆவது தென் இந்திய யாத்திரை**

**புட்டப்பர்த்தி யாத்திரையும், சுற்றுலாவும்**
ஆரம்பம்: 6-10-88 முடிவு: 30-10-88

**யாத்திரைக்கட்டணம்: ரூபா 1740/- மட்டும்.**

விபரங்கட்கு:-
**விநாயகா ரூர்ஸ்**
(அதிபர் அ. வி. அருணாசலம்)
இராஜநாயகி தியேட்டர், காங்கேசன்துறை.
(5753)

## ஹோம் பிறன்ஸ் யாழ் கிளை வைப்பாளர் சங்கம்

### அதி விசேட பொதுக்கூட்டம்

**இடம்:**
வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

**காலம்:**
சனிக்கிழமை (20-8-88) காலை 9-30 மணி

**விடயம்:**
எங்கள் வேண்டுகோளுக்கிணங்க ஹோம் பிறன்ஸை மத்தியவங்கி 20-7-88 தொடக்கம் ஒரு வருடத்துக்குப் பொறுப்பேற்றுள்ளது இது தொடர்பாக நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை ஆராய்தல்.

**குறிப்பு:**
யாழ்ப்பாண வைப்பாளர் எல்லோருடைய வைப்புப்பணவிபரங்களை மத்திய வங்கிக்கு கொடுக்கவேண்டியிருப்பதால் எல்லா வைப்பாளர்களையும் 80, அரசடி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள தனாதிகாரியிடம், இதற்குரிய படிவத்தைப் பெற்று; நிரப்பி அத்துடன் தங்கள் பணவைப்புப் பத்திரத்தின் பிரதியையும் (Photostat Copy) இணைத்து, அவரிடம் 31-8-88 க்கு முன் ஒப்படைக்கும் படி வேண்டுகின்றோம்.

காரியதரிசி
**ஆ. பாலகிருஷ்ணன்.**
10/8/88. (5752)

## மக்கள் வங்கி
# அடைவு நகைகள் மீளளித்தல்

**1. ஊர்காவற்றுறை கிளை.**

இக்கிளையில் அடைவு வைத்த நகைகளை மீளப்பெறுவதற்கு 22- 04- 88 க்கு முன்பு பணம் செலுத்தியவர்கள் அடைவு நகைகளை மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை மூலமாக இம் மாதம் 16, 17, 18, 23, 24 ஆகிய 5 தினங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**2. சாவகச்சேரிக் கிளை, பளை கிளை.**

இககிளைகளில் அடைவுவைத்த நகைகளை மீளப்பெறுவதற்கு 22- 04- 88 க்கு முன்பு பணம் செலுத்தியவர்கள் அடைவு நகைகளை மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கிளை மூலமாக இம் மாதம் 16, 17, 18, 23, 24, 25, 30, 31ம் 01- 09- 88 ஆகிய 9 தினங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு.**

1. மேற்கூறிய நகைகளை அடைவு வைத்து மீளப் பெறுவதற்குப் பணம் கட்டிய சகலருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடிதங்கள் கிடைக்கப் பெறுதவர்கள் தாம் அடைவு வைத்த கிளைகளுடன உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
2. நகைகளைப் பெறும் திகதிகளில் காலை 9.00 மணிக்கு
   அ. தமது அடையாள அட்டை,
   ஆ. பணம் கட்டிய ரசீது,
   இ. வங்கியால் அனுப்பப்பட்ட கடிதம் ஆகியவற்றுடன் மேற்குறிப்பிட்ட நகைகளை வழங்கும் கிளைக்குச் சமுகமளிக்கவும்.
3. உரிய திகதிகளில் நகைகளை மீளப்பெறுவிடின் அவை திரும்பவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்பிற்கு அனுப்பப்படும். அதனை மீளப்பெறுவதற்குப் பலத்த சிரமம் ஏற்படலாம் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

(C/6148)

**மு. கணேசசுந்தரம்**
பிரதேச முகாமையாளர்
(வட பிராந்தியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவிட்டபுரம் அருள்மிகு கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்

# மாவையம்பதியிலே இன்று சண்முகப் பெருமானின் தேரேறு விழா

பொன். சோமசுந்தரம்

முருகவழிபாட்டின் வளர்ப்புப்பண்ணையாகப் பன்நெடுங்காலமாக திகழ்ந்து வரும் முதுபெரும் முருக தலம் மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவிலாகும். இத்தலம் உய்ய அறநெறியும், உயர் சைவ மேம்பாடும், வேதாகம நெறி முறைகளும், ஆசார அநுட்டானங்களும் பேணி வளர்த்து வரும் பெரும் தலமாகும்.

இத்தொன்மைத்திருப்பதியில் ஆண்டு தோறும் ஆடித்திங்களில் பிரம்மோத்சவ விழாக்கள் நெடுங்காலமாகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்விழாக்களில் தேர்த்திருவிழாவிலும் அதற்கு மறுநாள் கீரிமலையில் நடைபெறும் தீர்த்த விழாவிலும் ஈழத்தின் பலபாகங்களிலிருந்தும் பல்லாயிரம் பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம்.

தேர்த் திருவிழாவில், இத்தலத்தில் அபிடேக ஆராதனைகள் விசேடமாக நிகழ்கின்றன. பக்தர்கள் பரவசமடையும் பாங்கில் பஞ்ச மூர்த்திகள் பவனி வருகின்றனர். பாற்காவடி, பன்னீர்க்காவடி, தூக்குக் காவடி, துலாக்காவடி, ஆட்டக்காவடி, பிரதட்டைக்காவடி ஆகிய நூற்றுக் கணக்கான காவடிகள் ஆடுகின்றன. பிரதட்டை, அடியழிப்பு, மாவிளக்கு ஆகிய நேர்த்திகள் நிறைவாக நடக்கின்றன. நாட்டின் சிறந்த தவில் நாயன வித்வான்கள் இசைக்கிறார்கள். தேவார திருமுறைகள் ஓதப்படுகின்றன. திருப்புகழ் அஞ்சலி நிகழ்த்தப் படுகின்றது. பக்தி பரவசத்தால் பக்தர்கள் ஆடியும் பாடியும் மகிழ்கிறார்கள். எங்கு பார்த்தாலும் கற்பூர வாசனையும் அரோகரா ஒலியும் நிறைந்து விளங்குகின்றன.

### திருவோலக் காட்சி

இவையாவற்றையும், பார்த்தும், அநுபவித்தும் பக்தர்கள் பரவசம் அடைகிறார்கள். ஆண்டிற்கொருமுறையாகுதல் தமது உற்றார், உறவினர், நண்பர்களுடன் தமது இஷ்ட தெய்வமான மாவை முருகனை பக்திச் சூழலில் வழிபடும் வாய்ப்புக் கிடைத்ததே என்று ஆத்ம திருப்தியும் அடைகிறார்கள். இத்தனை இன்ப அனுபவங்களிலும் பார்க்க, இத்திருத்தல சண்முகப் பெருமான் எழுந்தருளித் தேரேற வரும் திருவோலக் காட்சியும், திருப்பவனியின் தேரிலிருந்து பச்சை சாத்தி இறங்கி வரும் காட்சியும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் இதயங்களை வசீகரித்து இன்பமூட்டுகின்றன என்றால் அது மிகையாகாது.

என்றும் அழகனாய், என்றும் இளமைக் காரனாய், என்றும் ஆண்மைக் காரனாய், என்றும் இளையவனாய். முருகப் பெருமானைக் கருதி வழிபடுப கள். இக்கருத்திற்கள மந்த சௌந்தர்ய அழகும், உக்கிர அழகும் பொலிந்து விளங்கும் திருவுருவாக அமைந்துள்ளது இத்திருத்தலச் சண்முக மூர்த்தம்.

### முருகதத்துவம்


சுமார் இரண்டரை அடி உயரமுள்ள இத்திருவுருவின் ஆஜான பருவான தோற்றமும், அகண்ட மார்பும், திரண்ட புயக்கட்டுகளும், மெல்லிடையும், படைக் கலங்கள் ஏந்திய கரங்களும் அபயவரத முத்திரையும், புன்னகை தவழும் திருமுகங்களும், பன்னிரு கருணை விழிகளும், முருகப் பெருமானின் வீரத்தையும், வலிமையையும் ஆற்றலையும், கருணையையும், பேரழகையும் புலப்படுத்தும் வர்கள் அவன் அடியவர் தத்துவம் நிறைந்த வித்தக வடிவமாக அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

சக்தியும், சௌந்தர்யமும் பிணைந்திருக்கும் இவ்விக்கிரகம், அழகு, இளமை, ஆண்மை அருள் ஆகியவற்றின் சங்கமமாகிய முருகதத்துவத்தைக் கலையழகு சொட்டப் பிரதிபலிக்கிறது.

ஆணவ இருளகற்றும் உக்கிர அழகும், அன்பர்க்கருள் வழங்கும் சௌந்தர்ய அழகும் இணைந்து விளங்கும் சண்முகப் பெருமான் அழகிய மலர் மாலைகளும், ஆடை ஆபரணங்களும் அணிந்து விந்துதத்துவ மயில் பின்னிற்க நாததத்துவக் கோழிக்கொடி உயர்ந்து பறக்க ஞானதத்துவ வேல் கையிலேந்திக் குலிசன் திருமகளும் குறவர் மடப்பிடியும் மருங்கு நிற்க சர்வாங்க சுந்தரனாக, ராஜாதி ராஜனாக எழுந்தருளி சித்ர முகமாறும் முத்துமணி மார்பும் திக்கினில் இலாத பெருமானாக, தித்திமிதி திதென்னொத்தி விளையாடும் சித்ரகுமாரப் பெருமானாக பக்தர் குழாம்பாடிப்பாடிச் சூழ்ந்து வர, நடனமாடி வரும் அதியற்புதக்காட்சி எங்கும் நிறைந்த பரத்துவமே சண்முகன் என்ற பேருண்மையையும், ஆதியொடந்த ஆகிய நலங்கள் ஆறுமுகன்தான் என்ற தத்துவத்தை உள்ளத்தில் புலப்படுத்தும் இன்ப அனுபவமாகும்.

அழகுணர்வுதான் முருக வழிபாட்டின் அடிப்படை என்பதைத் தெளிவாக உணர்த்தும் அதிசய நிகழ்வுகளாகவும், உள்ளத்தை முருகப் பெருமானின் தூய எழிலில், அழியாத புனித வடிவில் ஈடுபட வைக்கும் வைபவமாகவும் இத்திருத்தலத் தேர் விழா அமைந்திருக்கிறது.

அநாகரீக ஆரவாரங்களும், ஆவேசங்களும், அமைதியின்மையும் பல்கிப் பெருகிப் பெருங் கவலையளிக்கும் இக்கால கட்டத்திலே காலத்திற்கேற்ற புதுவாழ்வு தருவான் முருகன் என்ற பெருநம்பிக்கையோடு மாவைத் திருத்தலத் தேர் விழாவில் கலந்து கொள்வோமாக. ★





தேர்த்திருநாளில் மாவிட்டபுரம் கந்தன் அருள் பெற வாழ்த்துகின்றோம்.
உள்ளூர் உற்பத்திப்பொருட்களுக்கு
வியாபார முன்னோடி ஸ்தாபனம்
முகுந்தன் ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்: சி. விக்னேஸ்வரன்
(பலசரக்குக் கடை)
மாவிட்டபுரம்



தேரேறி வரும் தேவசேனாதிபதி
அருள் பெற வாழ்த்துகின்றோம்.
"KUSHIBA"
அலுமினியத் தொழிற்சாலை ஊழியர்கள்
மாவிட்டபுரம்.



வினை தீர்க்கும் வேலவன் சண்முகன் திருவருள் பெற
வேண்டிநிற்கும்
தெல்லிப்பளை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
தெல்லிப்பளை.


வண்ண ரதத்தில் ஆரோகணித்து
வருகின்ற ஆறுமுகன் அருள்
வேண்டி நிற்கின்றோம்.
டயானி இன்டஸ்றீஸ்
222/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



We never know where Business will take you!
But we are sure that
"LANKA CEMENT"
will take you to build a
"SWEET HOME"
HEAD OFFICE:
M/S LANKA CEMENT LTD.
130, W. A. D. RAMANAYAKE MAWATHA,
COLOMBO - 2
Lanka Cement
தரத்திற்கும் உறுதிக்கும்
"லங்கா சீமெண்ட்"
நாம் சொல்லுகிறோம் பாவனையாளர்கள்
உறுதிப்படுத்துகிறார்கள்.
லங்கா சீமெண்ட் லிமிடெட்,
கீரிமலை வீதி, காங்கேசன்துறை.


## வித்தியாலய நலன்புரிச்சங்கக் கூட்டம்

கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய நலன்புரிச் சங்க விசேஷ நிர்வாக சபைக் கூட்டம் கடந்த ஞாயிறு காலை 9-00 மணிக்கு வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நலன்புரிச்சங்கப் போஷகரும், வித்தியாலய ஸ்தாபகரும், சிவநெறிக் காவலருமாகிய மறைந்த எஸ். எம். அருணாசலம் அவர்களுக்கு மௌன அஞ்சலியும், இரங்கலுரையும் நிகழ்த்தப்பட்டன. (இ)

## ஆங்கில தினப் போட்டியில் கிளிநொச்சிக் கோத்தணி முதல் இடம் பெற்றது

கிளிநொச்சி, ஆக. 11

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆறு கோத்தணிப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் கிளிநொச்சி கோத்தணி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

சுமார் 36 பரிசில்களில் 23 பரிசில்களை கிளிநொச்சிக் கோத்தணி தட்டிக் கொண்டது.

இரண்டாம் இடத்தை பளை கோத்தணியும், மூன்றாம் இடத்தை வட்டக்கச்சி கோத்தணியும், நான்காம் இடத்தை முரசுமோட்டைக் கோத்தணியும், ஐந்தாம் இடத்தை உருத்திரபுரம் கோத்தணியும், ஆறாம் இடத்தை பூநகரி கோத்தணியும் பெற்றுக் கொண்டன.

கிளிநொச்சி கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கே. சோமசுந்தரம் தலைமை யில் வைபவம் சென். திரேசா மகளிர் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

நான்கு ஆண்டு முதல் 12ஆம் ஆண்டு வரையிலான மாணவ மாணவிகள் ஏ. பி. சி. என மூன்று பிரிவாகப்பிரிக்கப்பட்டு உரையாடல், பிரதிபண்ணுதல், சொல்வதெழுதல், ஓரங்கநாடகம் ஆகிய பகுதிகளில் [illegible]

## பாதுகாப்பு ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் ஊழியர்களின் நாளாந்த சம்பளம் ரூபா 50/- இலிருந்து ரூபா 80/-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மக்கள் வங்கிக் கிளைகளின் பாதுகாப்பு அத்தியட்சகரான திரு. வி. கே. ஆறுமுகம், மக்கள்வங்கி பாதுகாப்பு பணிப்பாளர் திரு. ஸ்ரான்லி சேனநாயக்காவுடன் தொடர்பு கொண்டதை அடுத்தே இச்சம்பள அதிகரிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (இ-70)

## "தண்ணீர்" நாவல் வெளியீட்டு விழா

அமரர் கே. டானியலின் "தண்ணீர்" நாவல் வெளியீட்டு விழா எதிர்வரும் 14-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

கலாநிதி நா. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். இந்தவிழாவில் செல்வி. தாரகா டானியல் வரவேற்புரை நிகழ்த்துவார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

திரு. வீ. சின்னத்தம்பி தெணியான் திரு. சி.வன்னியகுலம், திரு. சி. சிவலிங்கராசா ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்துவார்கள்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் நன்றியுரை நிகழ்துத்துவார். (இ-5)

## நிலக்கரி மின் உற்பத்தி திட்டம் நிராகரிப்பு

நிலக்கரியில் இயங்கும் மின் உற்பத்தி நிலையம் ஒன்றைத்திருகோணமலையில நிறுவுவது என்ற இலங்கை மின்சாரசபையின் விண்ணப்பத்தை கடற்றொழில் அமைச்சு நிராகரித்து விட்டது.

இத்தகவலை அமைச்சுச் செயலாளர் விஜயரத்ன பண்டா தெரிவித்தார்.

## மருந்து இன்னும் வந்து சேரவில்லை

புதுக்குடியிருப்பு ஆக 11

புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு வழங்கப்படவேண்டிய 3 ஆம் கந்தாயத்துக்கான மருந்து வகைகள் இதுவரை வழங்கப்படவில்லை.

தற்போதைய நிலையில் அப்பகுதியில் தனியார் மருத்துவ மனைகள் கூட இல்லாததால் மருந்துத் தட்டுப்பாட்டால்பொது மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இ- 126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்® நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை ரூபா 68/55 125 இரும்

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி சின்னம்மா நாகேந்திரம்

மலர்வு: 11 - 03 - 1920
உதிர்வு: 25 - 08 - 1987

திதி: 11 - 08 - 88

நீண்ட துயில்கொண்டு ஆண்டொன்று ஆனாலும்
தூண்டா மணிச்சுடராய் ஒளிர்கின்றாய் எம்முன்னே
கூண்டைப் பிரிந்தநின் தன் ஆன்மா சாந்திபெற
வேண்டித் துதிக்கின்றோம் ஆண்டவன் திருப்பாதம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

31/6, அம்பகர் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குறிப்பு: இன்று அன்னாரின் ஆத்மசாந்திக்காக நடைபெறும் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

(5?6)

# விவசாயக்கூலியாட்களுக்கும் ஓய்வூதியத்திட்டம் அமுலாகும்

## காப்புறுதித் திட்ட முகாமையாளர் கூறுகிறார்

கிளிநொச்சி, ஆக. 11

உத்தியோகத்தர்கள் போல் மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்கள் போல், விவசாயிகளும் ஓய்வூதியம்பெற தற்போது வழி வகுக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் சிறந்த பலனைப்பெற முடியும். அதிலும் இளம் வயதிலேயே இந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேருபவர்கள் கூடுதல் பயனை அடைய முடியும். இதே போல் விவசாயக் கூலியாட்களுக்கும் விரைவில் ஓய்வூதியத் திட்டம் ஒன்று நடைமுறைக்கு வரும்.

கிளிநொச்சி மாவட்ட கமநலச்சேவை உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கையேடு வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய காப்புறுதித் திட்ட முகாமையாளர் திரு. சிவகுரு மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகையா தலைமையில் வைபவம் நடைபெற்றது.

வைபவத்தில் முதலாவது கையேட்டை கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. குணராசாவும், இரண்டாவது பிரதியை கச்சேரி தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசாவும், மூன்றாவது பிரதியை காப்புறுதித் திட்ட முகாமையாளர் திரு. சிவகுருவும் நான்காவது பிரதியை உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகையாவும் ஐந்தாவது பிரதியை கிளிநொச்சி கமநலசேவை நிலையத் தலைவர் திரு. கே. பாக்கியநேசரும் வழங்கினர். (இ-76)

# மறைந்து போகும் கலைச் செல்வங்களுக்கு புத்துயிர் அளிப்பது அவசியம்

யாழ்ப்பாணம், ஆக. 11

நமது பாரம்பரிய கலைச் செல்வங்கள் மறைந்து கொண்டே போகின்றன. இதன் காரணமாக அவற்றுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டியது அவசியமாகின்றது. இவ்வாறாக எமது பாரம்பரிய கலைச் செல்வங்களை புதுப்பிப்பதற்கும் அவற்றுக்குப் புத்துயிர் அளிப்பதற்கும் அவற்றை விருத்தி செய்வதற்குமாகவே வடஇலங்கை நுண்கலை மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

வடஇலங்கை நுண்கலை மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் யாழ். கல்வித்திணைக்கள பிரதம கல்வியதிகாரி சோமசுந்தரம் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கூட்டம் அண்மையில் யாழ் - வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

பிரஸ்தாப மன்றத்தை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்த நுண்கலை மன்றம் 5 ஆண்டுப்பாடத் திட்டங்களைத் தயாரித்து பயிற்சியாளர்களுக்கு வழங்கும்.

5 ஆண்டு முடிவில் அந்தப் பாடத் திட்ட அடிப்படையில் பரீட்சைகள் நடத்தப்படும்.

சித்திஅடைந்தவர்களிடமிருந்து சித்திர ஆசிரியர்களுக்கான தெரிவு இடம்பெறும்.

இப்படிக் கல்வி அதிகாரி தமது உரையில் குறிப்பிட்டார்,

இந்தக் கூட்டத்தில் பல சித்திர ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்.

மேலும் யாப்பு அமைப்புகுழு, பாடத்திட்ட அமைப்புக்குழு என்பனவும் தெரிவு செய்யப்பட்டன.

சித்திரக் கல்வி அதிகாரி கலாசேகரி ஆ. தம்பித்துரை, யாழ் கல்வி அதிகாரி இ. சிவானந்தன், ஓய்வுபெற்ற சித்திர ஆசிரியர் செ. சிவப்பிரகாசம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

## புதிய நிறுவனம்

திருநெல்வேலி கிழக்கு புனித சவேரியார் ஆலயத்துக்கு அருகிலுள்ள ஸ்ரீபவனம் கட்டடத்தில் ''நல்வாழ்வு உதயம்'' என்ற பெயரில் கைத்தொழில் நிறுவனம்ஒன்று அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டது.

வண. அ. சகாயதாசன் அடிகளார் இதற்குப் பொறுப்பாக இருப்பார்.

வைபவத்தில் வண பிதா கிறிஸ்தோபர் அடிகளார் ஆசியுரை வழங்கினர் (இ)

## வட்டு- இந்துவில் இருந்து அறுவர்

பண்டத்தரிப்பு ஆக 11

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வரலாற்றில் இவ்வாண்டு அதிக மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கலைத்துறைக்கு மூவரும் பௌதிக விஞ்ஞானத்துறைக்கு ஒருவரும், மருத்துவத் துறைக்கு ஒருவரும், வர்த்தகத் துறைக்கு ஒருவருமாக அறுவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (இ-120)

### யாழ் மாநகர சபை எல்லைக்குள் உள்ள

# ஏழைக் குடும்பங்களுக்கு பணம் வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வறுமையிலும், ஏழ்மையிலும் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா வரையான தொகை மானியமாக வழங்கப்பட உள்ளது.

செவன சரண நிதியத்தினால் வழங்கப்பட்ட இப் பணம் 85 குடும்பங்களின் வீடமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும்.

இதற்கென யாழ் மாநகர சபைப் பகுதிக்கு 8 லட்சத்து 52 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மானியம் வழங்கப்படும் போது அண்மைக் கால அசம்பாவிதங்களின் போது பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்களை இழந்து பரிதாபகரமாக வாழ்க்கை நடத்துபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்த மானியம் பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களின் பெயர்ப் பட்டியல் யாழ்- மாநகர ஆணையாளர் வி.கே. சிவஞானம் தலைமையில் செயற்படும் நகர வீடமைப்பு, உப திட்ட வீடமைப்பு, சமூக அபிவிருத்திக் குழுவினால் தயாரிக்கப்படும்.

இந்தக் குழுவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதேச முகாமையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம், நல்லூர் [illegible] ஆகியோர் அங்கம் [illegible] (இ-...)

## தீவுப்பகுதிக்கு ரூ. 7 1/2 லட்சம்

வேலணை, ஆக. 11

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு தீவுப்பகுதிக்கு 7 இலட்சத்து 50ஆயிரம் ரூபா மின்சாரத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்டது.

கிராமசேவை அலுவலர் பிரிவுகள் மட்டத்தில் மின்சாரம் முக்கியமாக தேவைப்படும் வீதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது. (இ - 167)

# உலக்கை தேய்ந்து உளிப்பிடியான நிலையில் சி. டபிள்யூ. ஈ. கட்டடம்

குருநகர், ஆக 11

உலக்கை தேய்ந்து உளிப்பிடியான நிலையில் யாழ்ப்பாணம் சி. டபிள்யூ. ஈ. கட்டடம் தற்போது காணப்படுகிறது.

யாழ்ப்பாணம், பாங்ஷால் வீதியில் முதலாம் குறுக்குத் தெருச் சந்தியின் மேற்குப் பக்கமாக அமைந்திருக்கிறது இந்தக் கட்டடம்.

கடந்தகால அசம்பாவிதங்களின் போது பல தடவைகள் இக்கட்டடம் சேதம் அடைந்திருந்தது.

1987 அக்டோபர் பிரச்சினைகள் கட்டடத்தை மேலும் உருக்குலைத்தன. அதன் பின்பு எஞ்சிக்கிடந்த ஓடுகள், ஜன்னல்கள், கதவுகள் மர்மமான முறையில் மறைந்து போயின.

இப்பொழுது நிலைகள் கூட அகற்றப்பட்டு விட்டன. இனி என்ன சுவர்களும் சிறிது சிறிதாக அகற்றப்பட்டு விடலாம்.

இவ்விதம் நிலத்தை விட்டு சகலதையும் துப்பரவாக்கி விட்டால் புதிய கட்டடம் ஒன்றைக் கட்டலாமென்று ''சதோச'' எதிர் பார்க்கிறதா? என்று அக்கறை உள்ள பொதுமக்கள் கேட்கிறார்கள். (இ-52)

# முகாம் அகன்றும் சந்தை இயங்கவில்லை

தாளையடி, ஆக. 11

வடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கேணிச் சந்தை இன்னமும் வழமையான இடத்தில் இயங்கத் தொடங்கவில்லை.

மருதங்கேணி சந்தைக் கட்டடங்களிலும், கடை கட்டடங்களிலும் இந்திய அமைதிப்படை முகாம் இருந்து வந்ததினால் சுமார் எட்டுமாதங்களாக அக்கட்டடங்களில் சந்தையும் கடைகளும் திறக்கப்படவில்லை.

தற்போது முகாம் தாளையடிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

கடை உரிமையாளர்கள் தமது வழமையான கட்டடங்களில் கடைகளைத் திறக்க அனுமதி கோரியுள்ளனர் என்று தெரிய வருகின்றது. (இ-144)

## காலராவுக்கு சிறுமி பலி!

புதுக்குடியிருப்பு பகுதியில் மீண்டும் காலரா நோய் பரவ ஆரம்பித்துள்ளது.

இரணைப்பாலைக் கிராமத்தில் நான்கு வயதுச் சிறுமி ஒருத்தி இந்த நோய்க்குப் பலியானார். (இ-126)

# உடுத்துறை மத்திய மகா வித்தியாலயத்தில் மீண்டும் பரீட்சை நிலையம் நிறுவக்கோரிக்கை

தாளையடி, ஆக. 11

வடமராட்சி கிழக்கில் கடந்த சில வருடங்களாக ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை நடத்தப்படாமல் இருக்கும் பரீட்சை நிலையத்தை (உடுத்துறை மத்திய மகாவித்தியாலயம்) மீண்டும் இயங்க வைப்பது தொடர்பாகஉடுத்துறை மத்திய மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் யாழ் கல்வித் திணைக்கள அதிகாரியைச் சந்தித்தனர்.

யாழ். கல்வித்திணைக்களத்தில் கல்வி அதிகாரி திரு. கந்தசாமியைச் சந்தித்த பாடசாலை அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகள் வடமராட்சி கிழக்கின் பரீட்சை நிலையம் இயங்காததினால் அப்பகுதி மாணவர்கள் வெளி இடங்களில் போய் தங்கியிருந்து பரீட்சைக்குத் தோற்ற வேண்டியிருப்பதாகத் தெரிவித்தனர்.

முன்பு உடுத்துறை மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கிய செம்பியன்பற்று பரீட்சை நிலையத்தை மீண்டும் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அதிகாரியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## இராணுவ சென்றி அகற்றப்பட்டது

புதுக்குடியிருப்பு ஆக 11

முல்லைத்தீவு பரந்தன் வீதியின் 12ஆம் கட்டையில் இருந்து இராணுவ சென்றி அகற்றப்பட்டுவிட்டது.

இச்சென்றி இருந்த போது பிரயாணிகள் நீண்டதூரம் நடந்து செல்லவேண்டியிருந்தது. (இ 126)

# ரூ. 2,000 நிறுத்தப்பட்டதால் பல குடும்பங்கள் பாதிப்பு

கோப்பாய், ஆக 11

அசம்பாவிதங்களின் போது இறந்தவர்களின் குடும்பத்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூபா 2000 நிவாரண உதவி அண்மையில் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நிறுத்தப்பட்ட இந்த உதவியை மீண்டும் வழங்கும்படி கோப்பாய் பகுதி மக்கள், புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளரைக் கேட்டுள்ளனர். (இ-72)

# குடும்பத் தகராற்றால் வீடு கொளுத்தப்பட்டது; படையினர் அணைத்தனர்

பலாலி, ஆக. 11

குடும்பச் சண்டையினால் கொளுத்தப்பட்ட வீடு ஒன்றை வீதியால் சென்ற இந்திய அமைதிப் படையினர் அணைத்தனர். அத்துடன் கணவன், மனைவியையும் எச்சரித்துச் சென்றனர்.

இச்சம்பவம் ஏழாலை வடக்கில் உள்ள வீடொன்றிலேயே நடைபெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கணவனுக்கும், மனைவிக்குமிடையில் நடைபெற்ற சண்டை வீடு கொளுத்தும் அளவுக்கு முற்றியது.

வீடு எரியும்போது அவ்வீதியால் ரோந்து சென்ற அமைதிப் படையினர் அயலவர்களுடன் சேர்ந்து தீயை அணைத்தனர்.

பின்பு கணவனையும், மனைவியையும், பிள்ளைகளையும் தம் முன்னால் அழைத்துச் சத்தியம் செய்யச் செய்ததுடன் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தால் தாம் கடுமையாக நடக்க நேரிடும் என படையினர் எச்சரித்தனர்.

வீட்டினுள் இருந்த உடுப்புக்கள், பிள்ளைகளின் புத்தகங்கள் உட்பட பல பொருள்கள் எரிந்து சாம்பலாகின என்று தெரியவருகிறது. (இ - 119)






## 31ஆம்நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்



காரைநகர் களபூமி பொன்னுவளையைச் சேர்ந்த

### அமரர் திருமதி சிதம்பரம்பேரம்பலம்

யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ், (நுகேகொட), யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ் (யாழ்ப்பாணம்) உரிமையாளரின் அன்பு மனைவி

மண்ணில்: 8-3-1923
விண்ணில்: 12-7-1988

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், எங்கள் குடும்பத்தின் தலைவியாகவும் வாழ்வின் வழிகாட்டியாகவும் வாழ்ந்து எங்கள் அனைவரையும் நல்வழி நடத்திய அன்புத் தெய்வமே! எம்முடன் இருந்து எம்மை விட்டுப் பிரிந்த அன்பின் தீபமே! எங்களுக்கு திக்கரை முருகனின் அற்புதத்தை எடுத்துக் காட்டியும் அவரின் வருடாந்த தேரோற்சவ தினத்தன்று சிவப்பேறு எய்தினீர்கள். உங்கள் நினைவுகள் எங்கள் இதயத்தின் அணையாத தீபமாகப் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டோர்க்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் நன்றியைத்தெரிவித்துக் கொண்டு இன்று 11-8-1988 வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பொன்னுவளை,
களபூமி, காரைநகர். (5640)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லார் அவையஞ்சு வார்.

**பொருள்:**

நூல்களைக் கற்றறிந்த போதிலும் நல்ல அறிஞரின் அவைக்கு அஞ்சுகின்றவர், கல்லாதவரை விடக்கடைப்பட்டவர் என்று கூறுவர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22073
11-08-1988 க. பெ. இல. 23


## கடற் பயணம்

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துக் கஷ்டம் நிறைந்த கிராமங்களும், பிரதேசங்களும் அதிகம்.

1983 இல் யுத்த நிலைமை ஆரம்பமாவதற்கு முன்னரே, தமிழ்ப் பகுதிகள் மீது காட்டப்பட்ட பாரபட்சம் புறக்கணிப்பு என்பன காரணமாக இப்பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகள் விருத்தி செய்யப்படவில்லை.

மூன்று நான்கு சகாப்தங்களுக்கு முன்னர் இடப்பட்ட வீதிகளும், ஒழுங்கைகளும், பாலங்களும் உரிய பராமரிப்பும் செப்பனிடுதலும் இல்லாமல் சீரற்றுப்போய் விட்டன.

நிலப் போக்குவரத்து வசதி இப்படியிருக்க, கடற்போக்குவரத்து வசதி உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாகி விட்டது.

கடற் போக்குவரத்து சீரற்றுப் போனதால் பாதிக்கப்பட்டவர்கள் தீவுப்பகுதி மக்களே. நிலத்தில் பயணம் செய்வதை விட, நீரில் பயணம் என்பது கவனமாகவும், மிக அவதானத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டியது.

பருவ காலங்களையொட்டி, கடற் பயணம் மிகவும் ஆபத்தானதாக மாறுவதும் உண்டு. ஆகையால் நிலப் போக்குவரத்தை விட, அது விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

என்னும் தீவுப்பகுதி மக்களின் கடற்பயணம் கடந்த பல வருடங்களாக கஷ்டங்களும், சிரமங்களும், ஆபத்துகளும் நிறைந்ததாகவே உள்ளது.

தீவுப்பகுதி மக்களின் கடற்பயணத்துக்கென ஆறு மோட்டார் லோஞ்சுகள் இருந்த காலம் ஒன்று உண்டு ஆனால் இப்போது மிஞ்சியிருப்பதோ ஒன்றே ஒன்றுதான்!

அந்த ஒன்றும் அடிக்கடி பழுதடையும் பழைமை நிலைக்கு வந்து விட்டது.

அதனால் சிறிய படகுகள், தோணிகளில் மக்கள் பயணம் செய்யும் அவலநிலை உருவெடுத்துள்ளது.

ஆழம் குறைந்த கடற்பகுதியானால், கால் மைல், அரைமைல் தூரமானால் வள்ளங்கள், தோணியில் பிரயாணத்தை ஒருவாறு சமாளிக்கலாம்.

ஆழமான கடற்பகுதியில், நீண்ட தூரத்தை வள்ளங்களில் கடப்பது என்பது ஆபத்து மிகுந்த முயற்சியாகும். கஷ்டத்தை வலிந்து வாங்கிக் கொள்ளும் ஏற்பாடாகும்.

மக்கள் நாளாந்தம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பிரயாணம் செய்வதையும், பிரயாணத்தில் படும் கஷ்டங்களையும், அவலங்களையும் அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கிறோம்.

தொடர்ந்து ஐந்து வருட காலமாக இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு வருபவர்கள் தமிழ் மக்கள். தீவுப்பகுதி மக்களுக்கோ அந்தப் பாதிப்போடு கடற்பயணக் கஷ்டமும் மேலதிகம்.

அவர்களின் இந்தக் கஷ்டத்தைப் போக்க இரண்டு புதிய மோட்டார் லோஞ்சுகள் கட்டப்படவுள்ளதாக ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

ஒன்றும் இல்லாமல் இருப்பதை விட இரண்டு பரவாயில்லை என்று திருப்திப்படலாம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அரச அதிபர் திரு. மு. பஞ்சலிங்கத்தின் முயற்சிகளைப் பாராட்டுகின்றோம்.

புதிய மோட்டார் லோஞ்சுகள் இங்கு விரைவில் வந்து சேர வேண்டும் மேலும் போதியளவு லோஞ்சுகள் வர ஏற்பாடாக வேண்டும் தீவுப்பகுதி மக்களின் பயணக் கஷ்டம் தீர வேண்டும் அவர்கள் உயிர் ஆபத்தில்லாமல் வசதியாகப் பயணம் செய்ய வேண்டும் என்பதேஎமது விருப்பமும் வேண்டுதலும் ஆகும்.

## சுற்றிவளைப்பில் 11 பேர் தடுத்து வைக்கப்பட்டனர்

ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டு, மன்னுகண்டால், கூளாமுறிப்பு ஆகிய முகாம்களைச் சேர்ந்த இந்திய அமைதிப் படையினர் கூட்டாக சேர்ந்து கற்சிலைமடு கிராமத்தை சென்ற வெள்ளி, சனிக்கிழமைகளில் சுற்றி வளைத்தனர்.

600க்கும் மேற்பட்ட பொது மக்களை படையினர் பாடசாலைக்கு கூட்டிச் சென்றனர்.

இரு தலையாட்டிகள் ஒட்டுசுட்டான் முகாமிலிருந்து கொண்டு வரப்பட்டு 11பேரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

இந்த 11 பேரும் முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

கூட்டிச் செல்லப்பட்டவர்களின் மனைவிமார், தாய், தந்தையர் முகாமுக்கு தினசரி சென்று கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு கேட்டு வருகின்றனர்.

இதுவரை எவரும் விடுவிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

# பல கட்சி அரசியல் முறை கோரி பர்மாவில் கிளர்ச்சிகள் தீவிரம்

## 2 நாள் ஆர்ப்பாட்டத்தில் 100 க்கு மேலானோர் பலி!

ரங்கூன், ஆக. 10

இரண்டு தினங்களாக பர்மாவில் நடந்த மாணவர் கிளர்ச்சியில் 120 பேர் வரையில் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

பல கட்சி அரசியல் முறையைக் கொண்டு வரக் கோரியும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தக் கோரியும் மாணவர் அமைப்புக்கள் பர்மாவின் பல பகுதிகளில் பொதுவேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன. அதைத் தொடர்ந்தே கலவரங்கள் மூண்டன.

மத்திய பகுதியில் உள்ள ஒரு நகர் ஒன்றில் பொலீஸ் நிலையத்தைத் தாக்க முயன்ற கூட்டம் ஒன்றின் மீது பொலீஸார் சுட்டதில் 31 பேர் உயிரிழந்தனர்.

மற்றும் பல பகுதிகளில் இடம்பெற்ற வன்செயல்களிலும் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக ரங்கூன் செய்திகள் தெரிவித்தன.

வன்செயல்கள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து ரங்கூனில் காலவரையறையற்ற ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. (எ)

### ஐ.நா.குழு பயணம்

வளைகுடாவில் யுத்த நிறுத்தத்தை அமுலுக்கு கொண்டு வருவது சம்பந்தமான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்ள ஐ.நா. இரண்டு குழுக்களை தெஹ்ரானுக்கும் பக்தாத்துக்கும் அனுப்பி வைத்துள்ளது. (எ)

## பிரதமர் ராஜீவுக்கு டெலிபோன் செய்ய ஜெயலலிதாவுக்கு அனுமதி மறுப்பு!

பிரதமர் ராஜீவ் காந்தியின் அந்தரங்க Pers- onal) டெலிபோன் நம்பருக்கு இனி போன் செய்யக் கூடாது என்று ஜெயலலிதாவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜெயலலிதா புதிய கட்சி ஆரம்பிப்பதை புதுடில்லி மேலிடம் விரும்பவில்லை.

இதை அறிந்து கொண்ட ஜெயலலிதா எப்படியும் பிரதமரைச் சந்தித்தால் தான் தொண்டர்களிடம் தனது மதிப்பு உயரும் என்று திட்டம் போட்டு இடைவிடாமல் பிரதமரின் பெர்ஸனல் நம்பரைச் சுழற்றித் தீர்த்ததாகவும் கை ஓய்ந்ததே தவிர பிரதமருடன் பேச முடியாது போய் விட்டது என்று சென்னையில் இருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

எம். ஜி. ஆர் அமெரிக்கா சென்றபோது தனக்கு ஏதேனும் அபாயம் ஏற்பட்டால் உடனே தொடர்பு கொள்ள வேண்டும் என்று பிரதமரிடம் வேண்டிக் கேட்டு ஜெயலலிதா இந்த டெலிபோன் நம்பரைப் பெற்றிருந்தார்.

அப்போது சிலசந்தர்ப்பங்களிலும் இந்த நம்பரில் பிரதமருடன் ஜெயலலிதா பேசியதும் உண்டு.

பிரதமரின் தற்போதைய செயலாளர் ஷீலா தீட்சித் கண்டிப்புக்குப் பேர் போனவர்.

அண்மையில் ஜெயலலிதா இந்த நம்பருக்குப் போன் செய்தார். ஷீலா தீட்சித் மறுபக்கத்தில் இருந்து,

"இந்த நம்பரை இப்படி மிஸ்யூஸ் செய்யக் கூடாது. இனி இதில் பேச முயற்சிக்காதீர்கள். பிரதமரைச் சந்திக்க முறைப்படி முயற்சியுங்கள். நீங்கள் நினைத்த போதெல்லாம் ராஜீவ் காந்தியுடன் பேச முடியாது. அவர் நாட்டுப் பிரதமர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்"—என்று சுடச்சுட ஜெயலலிதாவுக்குக் கூறிவிட்டதாக சென்னைச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

புதுடில்லி போய் பிரதமரைச் சந்திக்க ஜெயலலிதா விமான டிக்கட்டும் எடுத்து வைத்திருந்தார்.

பிரதமரின் செயலாளர் இப்படிச் சொன்ன ஆத்திரத்தில் தான் "டாக்டரின் ஆலோசனைப்படி இரண்டு மாத ஓய்வு எடுக்கின்றேன்"—என்று ஜெயலலிதா அறிக்கை விட்டார். (எ)

## இலங்கை அகதிகள் தங்கியிருக்க சுவிஸ் அரசு அனுமதி நீடிப்பு!

சுவிட்சர்லாந்து நாட்டில் அடைக்கலம் கோரியுள்ள சுமார் 5000 இலங்கைத் தமிழர்கள், மேற்கொண்டு அறிவிப்பு வரும் வரை அங்கு தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து நாட்டின் அகதிகள் துறை உயர் அதிகாரி வெள்ளியன்று இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கையில் தமிழர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ளதாலும், உள்நாட்டு சண்டைகள் இன்னும் தீரவில்லை என்பதாலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

"அடைக்கலம் மறுக்கப்பட்ட சுமார் 800 இலங்கை அகதிகள் இன்னும் இங்கேயே தங்கியுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளில் மட்டும் 65000 இலங்கை அகதிகள் உள்ளனர் என்ற தகவலையும் அவர் தெரிவித்தார். (எ-9)

**வெளி உலகில்**

## இந்தியாவில் மனித உரிமை மீறல்; சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்!

### புதுடில்லி அரசு மறுப்பு

லண்டன், ஆக. 10

இந்தியாவில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியப் பாதுகாப்புப் படையினர், பழங்குடி மக்கள் மீது மனித உரிமை மீறல் குற்றங்களைப் புரிந்தனர் என்றும் பஞ்சாப்பில் அப்பாவிப் பொதுமக்கள் பாதுகாப்புப் படையினரால் துன்புறுத்தப்பட்டு வருவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டு ஒரு தலைப்பட்சமானது என்று இந்திய அரசு கருத்து வெளியிட்டிருக்கிறது. (எ)

## ஆப்கன் கெரில்லாக்கள் 'இராணுவ அமைப்பு' ஒன்றை ஏற்படுத்த முயற்சி!

காபூல், ஆக. 8

ஆப்கன் கெரில்லாக்கள் ஆட்சியை நடத்த முறையான இராணுவம் ஒன்றை அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டு உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானின் சில பகுதிகளை கெரில்லாக்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.

இப்போது முறையான இராணுவமாக கெரில்லா இயக்கத்தை மாற்ற வேண்டும் என்ற உணர்வு, கெரில்லாத் தலைவர்கள் மத்தியில் ஏற்பட்டு உள்ளது.

இது சம்பந்தமான பேச்சுக்கள் இஸ்லாமபாத்தில் உள்ள முக்கிய கெரில்லாத் தலைவர்கள் மத்தியில் நடைபெற விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

13 ஆயிரம் பேர் கொண்ட இராணுவம் ஒன்று, ஆட்சியை நிர்வகிக்க அவசியம் தேவை என்று உணரப்படுகின்றது.

இதேவேளை சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்வாட்ஸே காபூலில் அரசுத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

ஜெனிவா உடன்பாட்டின்படி ஆப்கனில் உள்ள சோவியத் துருப்புக்களில் அரைப்பங்கினர் விலக்கப்பட்டு விட்டனர் என்று மாஸ்கோவில் அறிவிக்கப்பட்டது.

காபூலைத் தாக்க கெரில்லாக்கள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தும் திட்டம் ஒன்றையும் வைத்திருப்பதாக சோவியத் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. (எ)

## பலஸ்தீனியர் கிளர்ச்சி தொடருகிறது

இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் பலஸ்தீனியர் நடத்தி வரும் கிளர்ச்சி ஒன்பதாவது மாதத்தை நேற்று எட்டியது.

அதை ஒட்டி பலஸ்தீனியர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது இஸ்ரேலிய இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது ஒரு பலஸ்தீனிய இளைஞர் மரணமானார். (எ)

## அரசியல் கைதிகள் விடுவிற்காக மக்களே குரல் எழுப்ப வேண்டும்

### பிதா சிங்கராயர் அறிக்கை

தென்னிலங்கைச்சிறைகளிலும், முகாம்களிலும் உள்ள தமிழ்க் கைதிகளின் விடிவுக்கு மக்களே குரல் எழுப்ப வேண்டும்.

இவ்வாறு வண பிதா ஆ. சிங்கராயர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது :

ஆஸ்பத்தாம்திகதி பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் அரசியற் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாகச் செய்தித்தாள்களில் வெளிவந்த செய்தி மிகவும் கவலைக்குரியதொன்று மட்டுமல்ல; இது குறித்து நான் மௌனம் சாதிப்பது எனது கடமையில் இருந்து தவறுவதுமாகும்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழ் இவர்கள்எப்பொழுதோ விடுதலையாகியிருக்க வேண்டும். இவ்விடயம் பற்றி ஸ்ரீலங்கா அரசுத் தலைவருக்கும் இந்தியப் பிரதமருக்கும் நானும் இன்னும் எத்தனையோ பொதுநல அமைப்புக்களும் எழுதிய மடல்கள் எந்தவிதமான பலனையும் தரவில்லை.

#### ரணராஜா

ஆனால் ஸ்ரீலங்காவின் பிரதிநிதி அமைச்சர் திரு. செல்டன் ரணராஜாவின் கருணை உள்ளத்தினால் பலரும் விடுவிக்கப்பட்டார்கள்.

ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பு அரசியல் அமைப்பு விதிகளின்கீழ் எவருக்கும் அநீதி இழைக்கக்கூடாது எனக் கூறியிருந்தும் அது வெறும் கண்துடைப்பாகவே இருக்கிறது நான் கைது செய்யப்பட்டு வதை முகாமில்வேதனைப்பட்ட வேளையில் 'சட்டத்தின் முன் யாவரும் சமமே' என்று அவசரப்பட்டு அறிக்கை விட்டவர்கள் கூட இன்று கைகட்டி மௌனிகளாக இருப்பது எனக்கு மட்டுமல்ல இன்று வதை முகாம்களில் வாடிக்கொண்டிருக்கும்எமது இளைஞர் யுவதிகளுக்கு மிகவும் வேதனையைக்கொடுக்கின்றது

இதுஒருபுறமிருக்க "தமிழ்மண்காப்போம்" என்று கூறிய சில இயக்கத்தலைவர்கள் இன்று ஆயுதங்களை ஒப்படைத்ததுமட்டுமல்ல ஸ்ரீலங்கா அரசுத் தலைவர்களின் விருந்தினர்களாகித் தங்கள் அமைப்புக்களைச் சார்ந்தவர்களை மட்டும் சிறையிலிருந்து விடுவித்தது ஏனைய சிறைக்கைதிகளை விரக்தியின் எல்லைக்குக் கொண்டுவந்துஇருக்கும்.

#### பொதுமக்களே சிறைகளில்

இவர்களது நடவடிக்கைகளால் அப்பாவிப் பொதுமக்களே இன்று சிறைகளில் எஞ்சியிருக்கிறார்கள். இவர்களில் சிலர் 1983ல் இருந்து சிறையில்வாடுகிறார்கள்.

'சமாதான உடன்படிக்கையை' அவசரப்பட்டு பிரசவித்தவர்கள் இன்று தங்கள் போப்பேச்சினால் நம் உடன்பிறப்புக்களைப் பயணக் கைதிகளாக வைத்துக்கொண்டிருப்பது இரு நாடுகளின் அரசியல் அமைப்பு [illegible] தனத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே நாங்கள் எடுத்த முயற்சிகள். செவிடன் காதில் ஊதிய சங்காக இருப்பதால் மக்களே இந்தக்கைதிகளின் விடிவுக்கு குரல் எழுப்ப வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதே எனது பணிவான அபிப்பிராயம்.

நான் சிறைப்படுத்தப்பட்டவேளையில் ஸ்ரீலங்கா அரசுத் தலைவருக்கு வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட இலட்சக்கணக்கான கடிதங்கள் நிச்சயமாக அவருக்குத் தலையிடியைக் கொடுத்திருக்கும். வெளிநாட்டவர்கள் இப்படியாகக் குரல் கொடுக்கும் வேளையில் நாம் மட்டும் மௌனிகளாவது பணயக் கைதிகளின் வேதனையை மேலும் அதிகரிக்கும்.

இவ்வேளையில் ஸ்ரீலங்காவின் அரசுப் படையினரால் மட்டுமல்ல இந்திய அமைதிப் படையினராலும் கைது செய்யப்பட்டவர்களையும் விடுவிக்க குரல் கொடுப்பது பொது மக்களாகிய எம்மிடமே இந்தப் புனித கடமை சார்ந்துள்ளது - என்று உள்ளது. (அ)

## சமய சந்நிதிகளில்

### நீர்த்தோற்சவம் தீமிதிப்பு நாளை நடக்கும்

காரைநகர், ஆக. 11

காரைநகர் அரசடிக் காடு கதிர் வேலாயுத சுவாமி கோயில் தீர்த்தோற்சவமும் தீமிதிப்பு வைபவமும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றன.

அதிகாலை 5 30 மணிக்குக் கதிர்வேற் பெருமான் பவனியாகப் புறப்பட்டு கிராமப் பிரதட்சணமாகவியாவில் சமுத்திர தீர்த்தக் கரையில் காலை 10 மணி அளவில் தீர்த்தமாடுவார்.

மாலை 5 00 மணி அளவில் ஆலய முன்றலில் பக்தர்களின் தீமிதிப்பு வைபவம் நடைபெறும்.

இவ்விழா வைபவம் சென்ற மாதம் 29 ஆம் திகதி நடைபெற இருந்தது ஆனால் அன்றைய தினம் பூரண ஊரடங்கு இடம் பெற்றதால் பின் போடப்பட்டது (இ-73)

### அலங்கார உற்சவம்

காங்கேசன்துறை, ஆக. 11

காங்கேசன்துறையில் எழுந்தருளியுள்ள காங்கேயப் பெருமானுக்கு இன்று வியாழக்கிழமை விசேஷ அலங்கார உற்சவம் நடைபெற உள்ளது.

முன்னர் தெப்பத் திருவிழாவாக கோலாகலமாக இடம்பெற்று வந்த இந்த உற்சவம் தற்போதுள்ள சூழ்நிலையால் அலங்கார உற்சவமாக இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. [illegible]

### சித்தி விநாயகர் மகோற்சவம்

நாவற்குழி சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் [illegible] தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

### தாவடியில் திருவாசக விழா

மானிப்பாய், ஆக. 11

திருக்கேதீஸ்வரம் திருவாசக சுவாமிகள் நினைவாக தாவடி பகவான் ஸ்ரீ சத்ய சாயிசேவா நிலயத்தினர் இம் மாதம் 13 ஆம்திகதிசனிக்கிழமை பிற்பகல் திருவாசக விழா ஒன்றை நடத்தவுள்ளனர்.

தாவடிப் பிள்ளையார் கோயிலடியில் நடைபெறும் இவ் விழாவுக்கு சபாரத்தின சுவாமிகள் தொண்டர் குழுத் தலைவர் திருப்பணித் தவமணி திரு எஸ் தியாகராசா தலைமை வகிப்பார்.

கரவைக்கிழார் திரு. க. கந்தசாமி "அன்பு நெறி" பற்றி உரையாற்றுவார்.

பண்ணிசைப் புலவர் திரு. வே. சிவஞானம் திருவாசகம் பாராயணம் நிகழ்த்துவார். (இ-90)

### கதிரை மாதா ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 11

சில்லாலை கதிரைமாதா ஆலய வருடாந்த உற்சவம் வெகு விமரிசையாக நடைபெற்றுவருகின்றது.

நேற்று 10 ஆம் திகதி புதன்கிழமை ஆலய நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள சிறு சதுக்கத்தில் கதிரை மாதாவின் திருஉருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டு செப வழிபாடும், ஆராதனைகளும் இளைஞர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை கதிரை மாதா கூட்டுத் திருப்பலி காலை 7 மணிக்கு இடம் பெறும். (இ-5)

## கடைக்குள் புகுந்த மினிபஸ்

குருநகர், ஆக. 11

வியாபாரத்திற்காக அப்பொழுதுதான் ஒரு பக்கம் திறந்து வைக்கப்பட்டிருந்த கடைக்குள் பிரயாண சேவைக்காக புறப்பட்டுப் போன மினி பஸ் நுழைந்தது.

இச்சம்பவம் செவ்வாய் காலை 6.30 மணியளவில் யாழ். கே. கே எஸ் வீதி தட்டாதெரு சந்திக்கு அருகாமையில் நடைபெற்றது.

கடையின் முன்பகுதியும் மினிபஸ் முற்புறமும் பலத்த சேதத்திற்கு உள்ளானது. கடைக்காரருக்கு ஏற்பட்ட நஷ்டஈட்டை 'மினிபஸ்' உரிமையாளர் செலுத்துவதாக உறுதியளித்தார். (க-31)

## மாங்குளம் பகுதியில் தீவிர தேடுதல்

மாங்குளம், ஆக. 11

மாங்குளம் பகுதியைச் சுற்றியுள்ள காடுகளில் இராணுவத்தினரின் சோதனைகள் தீவிரப் படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ். கண்டி வீதி, முல்லைத்தீவு வீதிகளின் காடுகளில் தேடுதல் வேட்டைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

பொதுமக்களின் ஒத்துழைப்புடனேயே சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை மாங்குளம் புளியங்குளம் சென்றியில் சோதனைகள் குறைந்துள்ளன பஸ் பிரயாணிகள் இறங்கிச் செல்ல வேண்டிய நிலையும் தற்பொழுது இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சேட்டிங்ஸ் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# உதயன்

11 - 08 - 1988 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுர ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, :-: யாழ்நகர்.

# பிரபாகரனுடன் இந்தியஅரசு நேரடியாகப் பேச வேண்டும்

## உலகத்தமிழர் இணைப்புக்குழு கோரிக்கை

நியூயோர்க், ஆக. 11
தமிழ்ப் பகுதிகளில் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வி. பிரபாகரனுடன் இந்திய அரசு நேரடியாகப் பேச்சு நடத்தவேண்டும்.

—இப்படி அமெரிக்காவில் இருந்து இயங்கும் உலகத் தமிழர் இணைப்புக்குழு கோரிக்கைவிடுத்திருக்கிறது.

இக்குழுவின் கூட்டம் அண்மையில் நியூ ஜெர்ஸியில் உள்ள பெயார்லிடிக்ஸன் பல்கலைக்கழகத்தில் நடந்தது. அமெரிக்கமனித உரிமைகள் கழகங்களின் பிரதிநிதிகள், சமூகசேவை நிறுவனங்களின் உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

இலங்கைக்கு இந்திய அமைதிப்படை அனுப்பப்பட்டு ஓராண்டு பூர்த்தியானதை ஒட்டி இக்கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானத்தில், திம்பு மாநாட்டுப்பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களுக்கு நிலையான—சாந்தியும் சமாதானமும் கிடைக்கச்செய்வதற்கு தாமதமின்றி அரசியல் உடன்பாடு காணப்படவேண்டும் என வலியுறுத்தப் பட்டது.

நீதிக்காகவும், உரிமைகேட்டும் போராடும் ஈழத் தமிழர்களிடம் நியாயமற்ற முறையில் இலங்கை, இந்திய அரசுகள் நடந்துகொள்வதாகவும் தீர்மானத்தில் கண்டனம் தெரிவிக்கப் பட்டது. (உ-4)

## ரெலோ போராளிக்கு வவுனியாவில் அஞ்சலி

வவுனியா, ஆக.11
திங்களன்று இரவு கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட ரெலோ இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளர் கு. உதயனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நேற்று முன் தினம் (செவ்வாயன்று) வவுனியாவில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

பஸ் நிலையத்திலுள்ள ரெலோ காரியாலயத்தில் சோக இசை ஒலிபரப்பப்பட்டது.

உதயனின் சடலம் நேற்று புதன்கிழமை கொழும்பிலிருந்து வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக பஸ் நிலையப்பகுதியில் வைக்கப் படும் என்றும் பின்னர் அவரது சொந்தஊரான நொச்சிமோட்டைக்குக் கொண்டுசென்று இறுதிக்கிரியைகள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-146)

## மூன்று போராளி...

(1.ம் பக்கத்தொடர்ச்சி)

துக் கொண்டிருந்தனர்.

யாரோ ஒருவர் கதவு வரை வந்து கிரனேட் ஒன்றை ஹோலில் உருட்டி விட்டனராம். அதைக் கண்டதும் எல்லோரும் பதறி அடித்து வெளியே ஓடினர். அப்போது அது வெடித்தது.

அதே நேரம் அந்நபர் வெளிவாசலினூல் பாய்ந்து ஓடினூராம். அவ்வேளை வெளியே நின்றவர்கள் அவரைத் துரத்தினர். அவர் அணிந்திருந்த தொப்பி அவ்விடத்தில் விழுந்தது. அதை விட்டுவிட்டு பாதையைக் கடந்து நேரே உள்ள குறுக்குப் பாதையால் ஓடி மறைந்து விட்டார்.

கிரனேட் வெடிப்பினூல் ஈழத்துநாதனுக்கும் வேறு இருவருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன. ஹோலில்கண்ணுடிகள் சிதறுண்டு சிறிது சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த வீட்டிலிருந்து இரண்டாவது வளவில்-திருமலை உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் அமைந்துள்ள வளவில்—இந்தியப் படையினர் முகாமிட்டுள்ளனர். அவ்வீட்டு வாசலில் சென்றியும் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்தையடுத்து உடனடியாக அங்கு அமைதிப்படை அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் விரைந்து வந்து விசாரணைகளை மேற் கொண்டனர். மோப்ப நாய் கொண்டு வரப்பட்டது.

அங்கு கிடந்த தொப்பியைச் சில நிமிட நேரம் மணம் பிடித்த நாய், நேரே உள்ள குறுக்கு வழியால் சென்று கிறீன் வீதியை அடைந்தது. அங்கிருந்து சோனக வாடியிலுள்ள போராளிகளின் இயக்கம் ஒன்றின் அலுவகத்திற்குள் புகுந்தது. அங்கிருந்த மூவர் கைது செய்யப் பட்டனர். (உ-150)

★ விக்னு ★
டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

(கலை வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L கலை வர்த்தக
90 ஆண்டுக்கான பிரிவு 2
ஆரம்பம்: 13 - 8 - 88
[காலை 8.00]

முக்கிய குறிப்பு :-

I. பிரிவு 1க்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
II. கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினுல் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றது.
III. 90 ஆம் ஆண்டுக்கான [பிரிவு 2] அனுமதியை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(C/ 6142)

## பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம் ஆக 11
யாழ்- பல்கலைக்கழக மாணவர்களின் அவசரப் பொதுக்கூட்டம் ஒன்று பல்கலைக்கழக வளவில் இன்று நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவன் தவராஜாவை விடுவிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## ரூ. 4 லட்சம் பொருள்கள் கொக்குவிலில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஆக 11
கொக்குவில் பூநாரி மரத்தடியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று வீட்டில் இருந்த அனைவரையும் குப்புறப் படுக்குமாறு எச்சரித்து விட்டு கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்டது.

சம்பவம் நடந்த வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டில் இருந்த ஒருவர் அங்கு வந்தபோது அவரிடம் இருந்தும் மோதிரம், கைக்கடிகாரம் என்பன கொள்ளையடிக்கப் பட்டனவாம். (உ-10)

## நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஆக 11
நேற்றுப் பகல் பளைக்கு அருகில் வேகமாகச் சென்ற மினிவான் ஒன்று விபத்தில் சிக்கியது. இதனுல் பெண் ஒருவர் உட்பட நான்கு பேர்படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆனையிறவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிவானே விபத்தில் சிக்கியது.

காயமடைந்த நால்வரும் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகசேர்க்சப்பட்டுள்ளனர். (உ-10)

## ஊழியர் சேமலாபநிதி செலுத்துவோருக்கு வீட்டுக் கடன் வசதி

கொழும்பு, ஆக. 11
ஊழியர் சேமலாபநிதி (ஈ. பி. எவ்) செலுத்துவோர் அரசாங்க வங்கிகளில் இலகுவாக வீடு கட்டுவதற்கான கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுதொடர்பாக தொழில் அமைச்சர் திரு. மைக்கல்பெரேரா சமர்ப்பித்த திட்டத்தை அமைச்சரவை நேற்று அங்கிகரித்தது.

சேமலாபநிதிசெலுத்துவோர் தமது சேமலாபநிதிக் கணக்கில் உள்ள பணத்தைப் பிணையாகக் காட்டிவீட்டுக்கடன் ளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள வகை செய்யப் பட்டிருக்கிறது (உ)

## முல்லைத்தீவில் தேடுதல் தீவிரம்

முல்லைத்தீவுப் பகுதியில் இந்திய அமைதிப் படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாக தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை முல்லைத் தீவு காட்டுப் பகுதியை நோக்கி இடைவிடாத ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து நடைபெறும் ஷெல்தாக்குதல், மற்றும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பெரும் எண்ணிக்கையானேர் முல்லைத் தீவை அண்டிய கிராமப் பகுதிகளில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருவதாகவும் தெரியவருகிறது. (உ-10)

## பூஸா...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ளார். மனிதாபிமான ரீதியிலும் நடந்துகொள்கிறுர். ஆனுல் சாப்பாட்டு விடயத்தில் மட்டும் எவரும் கவனம் செலுத்துவதாக இல்லை.

இவ்வாறு அந்தக் கைதி மேலும் குறைப் பட்டுள்ளார். (உ)

## மாவையில்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காட்சியைக் காண பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான அடியார்கள் இன்று மாவைத்தலத்திற்குத் திரளுவார்கள்.

மாவை ஆலய சுற்றுடல் புனிதத்துடனும், பக்தி சிரத்தையுடன் கூடிய அமைதியுடனும் காணப்படுகிறது.

இன்று காலை 7மணிக்கு பஞ்சரத பவனி ஆரம்பமாகும். பிற்பகல் தேர் முட்டியில் விசேட அர்ச்சனைகள், ஆராதனைகள், பண்ணிசை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெற்று மங்கள இசை முழங்க நடனத்துடன் சுவாமிகள் ஆலயத்திற்கு எழுந்தருளுவர்.

மாவட்டபுரம் தேர்த் திருவிழாவை ஒட்டி யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளில் இருந்தும் விசேட பஸ் சேவைகளை நடத்த ஒழுங்கு செய்யப் பட்டிருப்பதாக, வட பிராந்திய பஸ் போக்குவரத்துச் சபையின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

### ஆடி அமாவாசை

நாளை வெள்ளிக்கிழமை மாவை ஆலய மூர்த்திகள் ஆடி அமாவாசை தீர்த்தத்திற்காக கீரிமலைக்கு எழுந்தருளி தீர்த்தமாடி பிற்பகல் ஆலயத்திற்கு எழுந்தருளி வருவர்.

ஆடி அமாவாசைக்குரிய பிதிர்க்கடன்களைச் செய்வதற்கு கீரிமலையில் வழமையான வசதிகள் செய்யப்படும் என்றும் தெரியவந்துள்ளது. (அ-68)

## ஹெக்டே...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் நேற்றுத் தெரிவித்தார்.

## நான்கு அம்ச...

களை இனப்படுகொலை புரியும் ஜே. ஆரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கியது.

ஜே. ஆர்.-ராஜீவ் ஒப்பந்தம் தமிழர் நலன்களைப் பாதுகாக்க செய்யப்பட்ட ஒப்பந்தம் அல்ல என்பதுதான் எமது கருத்து.

ஆனுல் இந்த ஒப்பந்தம் தமிழர் நலன்களைப் பாதுகாக்குமானுல் இவ் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த நாம் ஒத்துழைக்கத் தயார் எனக் கூறிவந்தோம். இது தான் எமது இன்றைய நிலைப்பாடு.

விடுதலைப் புலிகளுக்குத் தமிழ் மக்கள் நலனில் அக்கறையில்லை, தமிழீழ மக்கள், ஜே. ஆர்.-ராஜீவ் ஒப்பந்தத்தை ஆதரிக்கின்றுர்கள். புலிகள் தமிழ் மக்கள் மீது தமது எண்ணங்களைத் திணிக்கின்றுர்கள், விடுதலைப் புலிகளுக்கு மக்களைத் தேர்தலில் சந்திக்கத் தைரியமில்லை. அதனுல்தான் ஆயுதங்களை ஒப்படைக்க மறுக்கிறுர்கள் என இந்திய அரசும், இந்தியப் பிரதமரும் உலக அரங்கில் எமக்கு எதிராகப் பிரசாரம் செய்து வருகின்றுர்கள்.

மிகப் பெரிய ஜனநாயக நாடு எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் இந்திய அரசு தமிழ் நாட்டில் தேர்தல் வைக்கக்கூடிய சூழ்நிலை இல்லை என்கிறது. அதே நேரத்தில் தமிழீழத்தில் தேர்தல் நடத்தவேண்டும் என்கிறது.

இந்திய அரசின் ஆக்கிரமிப்புத் தன்மையையும், அதை மறைக்க அவர்கள் செய்யும் பொய்ப் பிரசாரத்தையும் நாம் உலக அரங்கிற்கு எடுத்துக் காட்டி வந்திருக்கின்றோம்.

ஜே. ஆர்.-ராஜீவ் ஒப்பந்தத்தை ஏற்று நாம் ஆயுதங்களைக் கையளித்தபின் தேர்தல் வைப்பதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. எனவேதான் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க நிபந்தனையற்ற முறையில் ஒரு யுத்த நிறுத்தத்தை இந்தியா அறிவிக்க வேண்டும் என மீண்டும் மீண்டும் விடுத்த வேண்டுகோளை இந்திய அரசு நிராகரித்து விட்டது.

அதேவேளை நாம் மக்களைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம். இந்திய அரசு தயாரா [illegible] இப்போது கேட்க விரும்புகின்றோம்.

[illegible] கூறும் நான்கு நிபந்தனைகளின் கீழ் இந்தியா தமிழீழத்தில் ஓர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தத் தயாரா?

நிபந்தனைகள்:

1. இந்திய -இலங்கை ஒப்பந்தத்தை தமிழீழ மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.
2. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழீழத்தை விட்டு வெளியேறவேண்டும். ஓர் சர்வதேச அமைதிப்படை தமிழீழத்தில் நிறுத்தப் படவேண்டும்.
3. தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழீழ மக்களின் பிரதிநிதிகள்.
4. இச் சர்வசன வாக்கெடுப்பைக் கண்காணிக்க சர்வதேச பார்வையாளர் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும்.

இச் சர்வசன வாக்கெடுப்பில் நாம் தோல்வி கண்டால் ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

எமது அழைப்பை இந்திய அரசு ஏற்றுக் கொள்ளாது என்பதும் எமக்குத் தெரியும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போதும் மக்களைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றுர்கள் என்பதை, இந்த அழைப்பு உலகிற்குத் தெளிவு படுத்தும் என நாம் நம்புகின்றோம்.

''தர்மத்திற்காகவும், நீதிக்காகவும் போராடியவர்கள் தோற்றதாக வரலாறு கிடையாது''


இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பிரயாணி...

நின்றிருந்தனர். இவர்கள் அனலைதீவு, எழுவைதீவு, நயினுதீவு ஆகிய இடங்களை நோக்கி நகரவுள்ளதாகவும் தீவுப்பகுதியில் பரந்த அளவிலான தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப் பட இருப்பதாகவும் சொல்லப்பட்டது.

கடந்த சில தினங்களாக தீவுப்பகுதி பிரயாணிகள் நயினுதீவு கடற்படையினரதும் இந்திய அமைதிப்படையினதும் கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (உ-111)

## 9 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும்



லெப்- மு. உருத்திரமூர்த்தி
(அலன்)

மலர்வு: 05-05-1966
உதிர்வு: 21-12-1987

அலன் என்ற பெயர் கொண்ட
அஞ்சா வேங்கையே!
அன்னை தமிழின் அடிமைத் தளையறுக்க
ஆருயிர் ஈந்த
அழகுச் சிலையே!
அன்பின் திருவுருவே, நின்
பூதவுடல் மாண்டாலும், நினது
பொன்னுன லட்சியம்
என்றுமே அழிவதில்லை.

— அம்மா, அண்ணன்மார், அக்காமார், தங்கைமார், மைத்துனர்கள், உற்றூர், உறவினர், நண்பர்கள்.

(5709)

# மரண அறிவித்தல்கள்

## திரு. நாகமணி கணபதிப்பிள்ளை

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திரு. நாகமணி கணபதிப்பிள்ளை அவர்கள் 10- 08- 88 அன்று காலமானூர்.

அன்னூர் பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவபாக்கியம் இராசமணி, லீலா (அராலி) காலஞ்சென்ற படிவலிங்கம் ஆகியோரின் அன்புததந்தையும், சந்திரசேகரம், சுந்தரம் இராயச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனுரும் காலஞ்சென்ற ஞானசேகரம் ஞானேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற அனுசாதேவி, இராசரத்தினம், (கட்டடத்தினைக்களம், வவுனியா) தருமரத்தினம் (ஜேர்மனி) நடேசலிங்கம் (ஜேர்மனி) ஜமுனூராணி, விஜயராணி, ஸ்ரீதரன், ஸ்ரீசிவானந்தராசா, ஜெயச்சித்திரா, விஜேனுதினி, சோபா, ஜெகதேவி, புஸ்பா (ஜேர்மனி) இராசதுரை, பொன்னம்பலம் ஆகியோரின் பேரனும் மோஜி (ஜேர்மனி) விஜேனுத் (ஜேர்மனி) தஷிதரன் ஆகியோரின் பூட்டனுமாவர்.

அன்னூரின் ஈமக்கிரியைகள் 10- 08- 88 அன்று மாலை முரசுமோட்டையில் நடைபெற்றது. இத்தகவலை உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
சு. சுந்தரம்

194/1, முரசுமோட்டை,
பரந்தன். (5713)

## திரு. த. வடுகநாதன்

திரு. த. வடுகநாதன் இளைப்பாறியபுகையிரத நிலைய அதிபர் அவர்கள் தொல்புரத்திலுள்ள அவரின் இல்லத்தில் 10- 8- 1988 இல் காலமானூர். இவர் புவனேஸ்வரியின அன்புக் கணவரும், புவனநாதன் (J E.D.B. கொட்டக்கலை) வாசுதேவி, ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. த. சிறீஸ்கந்தராசா (உப தபால் அதிபர் உடுவில) சகுந்தலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னூரின் ஈமக்கிரியைகள் 11- 8- 88 வியாழக்கிழமை காலை 10 மணிகசு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மனைவி, மக்கள்
தொல்புரம். (5760)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற] லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 11-08-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Thursday 11th August 1988

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org